# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2201/4 - 2020 නොවැම්බර් මස 09 වැනි සඳුදා - 2020.11.09

*2201/4 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/ 1978* (X) (A).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் PV 115017 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும், நீர்கொழும்பு, போலவலான, மினுவாங்கொடை வீதி 495 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளதுமான பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், அதற்கான சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் தரப்பட்டுள்ளதும், இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதுமான பட்டத்தின் அளிப்புக்கு இட்டுச்செல்கின்றதாக அதன்கண் உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக ஒரு பட்டமளிக்கும் நிறுவகமாக பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டை ஏற்றங்கீகரிக்கின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரியூற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை நீர்கொழும்பு, போலவலான, மினுவாங்கொடை வீதி 495 ஆம் இலக்கத்தில் மட்டுமே நடாத்துதல் வேண்டும்.


1A - PG 5157 — 520 (2020/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியுற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்ட மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை, முனைவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

3. பெனட்டிக் XVI கத்தலிக் இன்ஸ்ரிரியுற் ஒப் ஹயர் எடியுகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது,

(அ) க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தக பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்புக்கற்கை நெறியொன்றுடன் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில், ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) சாதாரண சித்திகள் ('S') என்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்திற்கான சுருக்கீடு* |
|---|---|
| வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி | பிபிஎம் கௌரவ |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, நவெம்பர் 07.

*11-279*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.